**2025 அக்டோபர் மாதம் 30 – ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**எம் .சி .ஓ .பி. நெம்பர் : 21/2020**

MCOP No.: 21/2020 – விஜயா PW1 30.10.2025

க/பெ.சேகர்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, 3ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்தில் இறந்துபோனவர் எனது மகன். விபத்து சமயத்தில் எனது மகனுக்கு 19 வயது. நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள இழப்பீடு கோரும் மனுவில் எனது மகனுக்கு வயது 18 என்று தெரிவித்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்திலும் விபத்து சமயத்தில் எனது மகனுக்கு வயது 18 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்து நடந்த இடத்தை இன்றுவரை நான் பார்க்கவில்லை. விபத்து எவ்வாறு நடைபெற்றது என்ற விபரத்தை நான் நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்ட விபரம் பற்றி எனக்கு தெரியும் என்றால் வெங்கடசாமி என்பவர் விபத்து எப்படி நடந்தது என்று என்னிடம் சொன்னார். விபத்து சம்பந்தமாக காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் சக்திமணிகண்டன் என்பவர் புகார் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளதில் அவரை நான் நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். விபத்து சமயத்தில் எனது மகன் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது கணவரின் தங்கை மகன் பாக்கியராஜ் என்பவருக்கு சொந்தமானது.

விபத்து சமயத்தில் எனது மகனுக்கு இருச்சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரிதான். எனது மகன் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து யாரேனும் பயணம் செய்தார்களா என்றால் தெரியவில்லை. அதேபோன்று, இருச்சக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு என்ன காரணத்திற்காக சென்றார் என்று எனக்கு தெரியவில்லை. நிரூபணவாக்குமூலத்திலும், மனுவிலும் எனது மகன் அவரின் தங்கையை அழைத்துச் செல்வதற்காக தான் எனது மகன் இருச்சக்கர வாகனத்தை எடுத்துச்சென்றார் என்று குறிப்பிட்டுள்ள விபரம் பொய் என்றால் சரிதான். எனது மகன் தான் ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், எதிர்மனுதாரர் வாகனம் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்று முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எனது மகன் மீது முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. விபத்தில் எனது மகன் இறந்துவிட்டதால் குற்ற வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யாமல் வழக்கு முடிக்கப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்தில் ஈடுபட்ட எனது மகன் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக உள்ளேன். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எனது மகன் கவனக்குறைவாக ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்திய விபரமும், எனது மகன் ஓட்டிச்சென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்ற விபரமும் தெரிந்துவிடும் என்பதால் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

எனது மகன் மீது ஆண்டிபட்டி காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை எதிர்த்து தேனி மாவட்ட காவல்கண்காணிப்பாளரிடமோ, ஆண்டிபட்டி காவல் ஆய்வாளரிடமோ புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. விபத்தில் ஈடுபட்ட இருச்சக்கர வாகனத்தின் உரிமையாளரை இந்த வழக்கில் கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மகன் என்ன செய்து கொண்டிருந்தார் என்றால் கல்லூரியில் இரண்டாம் வருடம் படித்துக்கொண்டிருந்தார். எந்த கல்லூரியில் என்ன பாடப்பிரிவை படித்துக்கொண்டிருந்தார் என்று எனக்கு தெரியாது. மனுவிலும், நிரூபணவாக்குமூலத்திலும் விபத்து சமயத்தில் எனது மகன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தாரா அல்லது வேலை பார்த்துக்கொண்டிருந்தாரா அல்லது அவரது வருமானம் எவ்வளவு என்பது குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது மகன் எந்த வருமானம் எதுவும் ஈட்டி வரவில்லை என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளின் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றும், அவை எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. விபத்தை நேரில் பார்த்தவர்களை சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் நேரில் பார்த்ததாக எங்கள் ஊரில் யாரும் என்னிடம் சொல்லவில்லை. விபத்து சமயம் இரவு 9.40 மணி இருக்கும். விபத்து நடந்த ரோடு அகலமான ரோடு என்றால் சரிதான். ஒரே சமயத்தில் இரண்டு கனரக வாகனங்கள் கடந்து செல்லும் அளவிற்கு பெரிய ரோடு என்றால் சரிதான். விபத்து சமயத்தில் கார் ஓட்டுநர் சாலை விதிகளை கடைபிடித்து மெதுவாக ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல. விபத்திற்கு

எனது மகனின் கவனக்குறைவு காரணம் என்பதால் 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் இழப்பீடு கோர வேண்டும் என்றால் எனது மகன் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனத்தின் உரிமையாளரிடம் கோர முடியும் என்றால் சரியல்ல.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகாததால் 1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 30.10.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.30 18:48:38 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
30.10.2025